



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.8.2023) போரூர் ஏரியில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய மதகு அமைத்தல் மற்றும் போரூர் ஏரி முதல் இராமாபுரம் ஓடை வரை புதியதாக மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.8.2023) பழவந்தாங்கல் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு, பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.8.2023) அசோக் நகர் 4வது நிழற்சாலை மற்றும் அதனை சார்ந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## பீஜிங்கில் கனமழை!

பீஜிங், ஆக.4 –

சீனாவின் பல மாகாணங்களில் டொக்சூரி புயல் தாக்கும் என அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன்படி அங்குள்ள புஜியான் மாகாண கடற்கரை அருகே புயல் கரையை கடந்தது. அப்போது பெய்த கனமழை காரணமாக அங்கு கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இந்தப் புயலால் 100க்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. சுமார் 6,000 ஹெக்டேர் பயிர்கள் நீரில் மூழ்கி நாசமடைந்தது. இதனால் அங்கு ரூ.493 கோடி அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக சீன அரசாங்கம் கணித்துள்ளது. முக்கிய ஆறுகளில் தண்ணீர் அபாய அளவை விட தாண்டி ஓடுகிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 8 லட்சத்து 80 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர். கனமழையால் அங்கு இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கனமழை காரணமாக சீனாவில் இதுவரை 20க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர் என அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## தீரன் சின்னமலையின்
# வீரத்தையும் தீரத்தையும் போற்றி வணங்குகிறேன்!
### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!


**சென்னை, ஆக. 4–**

**சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தி – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்ட பதிவில், "தீரன் சின்னமலையின் வீரத்தையும் தீரத்தையும் போற்றி வணங்குகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையில் ஒரு சின்ன மலை!அவர்நெஞ்சில்சுமந்ததோ அடக்குமுறைக்கு எதிரான எரிமலை!

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகத் தமிழ் மண்ணில் விடுதலைக் கனலை மூட்டிய ஓடாநிலைக் கோட்டையின் ஓங்குயர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவுநாளில் அவரின் வீரத்தையும் தியாகத்தையும் போற்றி வணங்குகிறேன்.



இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

